


**22. 09. 2025**

## தலைப்பு செய்திகள்

1. வெளிநாடுகளில் வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி உத்வேகமாக திகழ்கிறார் என்று குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் அனைத்து பிரிவு மக்களுக்கும் சேவையாற்றும் சிறப்பான செயல்திட்டமே, சரக்கு சேவைவரி சீர்த்திருத்தங்கள் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் கீழ் ஆயிரத்து 156 கிராம சுகாதார செவிலியர் மற்றும் 75 துணை செவிலியர் பணியிடங்களுக்கான நியமன ஆணைகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னையில் இன்று வழங்கினார்.

4. மணப்பாறையில் மின்னணு தொழிற்சாலைகள் விரைவில் தொடங்கப்படவிருப்பதால் திருச்சி மாவட்டத்தில் வேலைவாய்ப்புகள் பெருகும் என்று மாநில அமைச்சர் திரு. கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

5. சீன ஜிங்ஷனில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் கர்மன் கவுர் வலேரியா இணை இன்று களமிறங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

குடியரசு துணைத்தலைவர்

வெளிநாடுகளில் வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி உத்வேகமாக திகழ்கிறார் என்று குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் அனைவருக்கும் ! அனைத்து வளர்ச்சி ! என்ற தலைப்பிலான உரைகள் அடங்கிய புத்தக தொகுப்பை இன்று புதுதில்லியில் வெளியிட்டு பேசியஅவர், பிரதமரின் தொலைநோக்கு பார்வை மற்றும் சிறந்த நல்லாட்சிக்கான அவரது அணுகுமுறை இந்த உரைகளின் மூலம் புலப்படுவதாக எடுத்துரைத்தார்.

பிரதமரின் 2-வது ஆட்சிக்காலத்தின், நான்காவது மற்றும் ஐந்தாவது ஆண்டுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில உரைகள் இதில் இடம் பெற்றுள்ளதாகவும் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் மக்களுக்கு சேவையாற்றும் தளமாக அரசியலை பிரதமர் முன்னெடுத்து செல்வதாக எடுத்துரைத்தார்.

பிரதமரின் சீரிய தலைமையில் உலகளாவிய மிகப்பெரிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் மூலம் 80 கோடிக்கும் அதிகமானவர்களுக்கு இலவச உணவு தானியங்கள் வழங்கும் திட்டம் நம்நாட்டில் செயல்படுத்த படுவதாக எடுத்துரைத்தார்.

54 கோடி ஜன்தன் வங்கி கணக்குகள் மூலம் அனைவருக்கும் வங்கி கணக்கு வசதியை பிரதமர் ஏற்படுத்தி கொடுத்திருப்பதாகவும், 13 கோடி கழிவறைகள் நாடுமுழுவதும் கட்டப்பட்டுள்ளதாகவும் திரு.அஷ்விணி வைஷ்ணவ் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்துள்ளது நாட்டு மக்களுக்கான பரிசு என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

அருணாச்சல பிரதேச மாநிலம் இட்டா நகரில் 3 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான 2 பெரிய நீர்மின் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பேசிய பிரதமர், நாட்டின் வளர்ச்சிக்கு அருணாச்சல பிரதேசத்தின் எழுச்சிமிகு கிராமங்கள் உத்வேகம் அளிப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**சரக்கு சேவை வரி**

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் இன்று நடைமுறைக்கு வந்துள்ள நிலையில், நாட்டின் வரி கட்டமைப்பு முறையில் புதிய அத்தியாயம் உருவாகி உள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சரக்கு சேவை வரி குறைப்பால், பொருட்களின் வரி குறைவதோடு, அதன் தாக்கம் சிறப்பான பலன்களை அளிக்கும் என்று பொதுமக்கள் தெரிவிக்கையில்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

**அமித்ஷா**

**நாட்டிலுள்ள ஏழை எளியோர், இளைஞர்கள், விவசாயிகள்,** மகளிரின் நலனுக்காக சேவையாற்றும் பிரதமரின் சிறப்பான செயல் திட்டமே, அடுத்த தலைமுறையினருக்கான சரக்கு சேவைவரி சீர்த்திருத்தங்கள் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இந்த சீர்த்திருத்தங்களால் பல்வேறு பொருட்களுக்கு சரக்கு சேவைவரி பெரியஅளவில் குறையும் என்பதோடு வளர்ச்சிப்பாதையை மேலும் விரைவுப்படுத்தி உலகின் வளமான நாடாக இந்தியாவை நிலைநிறுத்தும் என்று கூறியுள்ளார்.

நடுத்தர வர்க்க பிரிவினருக்கான வாய்ப்புகள் அதிகரித்து உள்ளதாக கூறிய அமைச்சர், அவர்தம் சேமிப்பு உயர ஜி.எஸ்.டி சீர்த்திருத்தங்கள் வழிவகை செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் கீழ் ஆயிரத்து 156 கிராம சுகாதார செவிலியர் மற்றும் 75 துணை செவிலியர் பணியிடங்களுக்கான நியமன ஆணைகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னையில் இன்று வழங்கினார்.

சர்வதேச, தேசிய மாநில அளவில் சிறந்து விளங்கிய 4 விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ், பணிநியமன ஆணைகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கூடுதல் வகுப்பறை கட்டடம், சமூகநீதி பள்ளி மாணாக்கர் விடுதி கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்ததுடன், 61 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 8 புதிய கட்டடங்களுக்கும் அடிக்கல் நாட்டினார்.

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம் காலவாக்கத்தில் 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாநில பயிற்சி கழகத்திற்கும் முதலமைச்சர் இன்று காணொலி மூலம் அடிக்கல் நாட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

கே.என்.நேரு

தமிழ்நாட்டில் வரும் சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணி வெற்றிபெறும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், கடந்த நான்கரை ஆண்டுகளில் திருச்சியில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

மணப்பாறையில் மின்னணு நிறுவன தொழிற்சாலைகள் விரைவில் தொடங்கப்படவிருப்பதால் திருச்சியில் வேலைவாய்ப்புகள் பெருகும் என குறிப்பிட்டார்.

முன்னதாக திருச்சி அண்ணா அறிவியல் மைய கோளரங்கத்தில் அறிவியல் காட்சி கூடத்தை அமைச்சர்கள் திரு.கோவி.செழியன், திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழியுடன் இணைந்து அமைச்சர் திறந்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

மூர்த்தி

மதுரை கிழக்கு ஊராட்சிக்கு உட்பட்ட ஒத்தக்கடை ஊராட்சியில் புதிய நியாயவிலை கடையை மாநில வணிகவரி பதிவுத்துறை அமைச்சர் திரு.மூர்த்தி இன்று துவக்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

நவராத்திரி

நவராத்திரி பண்டிகை நாடுமுழுவதும் இன்று பக்தி சிரத்தையுடனும் கோலாகலமாகவும் தொடங்கியது.

9 நாட்கள் நடைபெறும் இவ்விழாவின் ஒருபகுதியாக திருக்கோவில்கள் மற்றும் இல்லங்களில் மக்கள் கொலு அமைத்து இவ்விழாவை கொண்டாடி வருகின்றனர்.

அனைவரின் வாழ்விலும் ஆரோக்கியமும், நம்பிக்கையும் ஓங்க பிரதமர் வாழ்த்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

தர்மபுரி அரசு கலைக்கல்லூரியில் கல்லூரி மாணாக்கருக்கான கலை திருவிழாவை ஆட்சித்தலைவர் திரு. சதீஷ் இன்று துவக்கி வைத்தார். நாட்டுப்புற கலைகள் வளர கலைத்திருவிழாக்கள் வழிகோலும் என்றார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் ரயில் நிலையத்தில் தூய்மையே சேவை இயக்கத்தின் கீழ் நூற்றுக்கும் மேற்பட்ட திறன் இந்தியா பயிற்சி பெற்ற மாணவிகள் தூய்மைப்பணிகளில் ஈடுபட்டு குப்பைகளை அப்புறப்படுத்தினர்.

**கன்னியாகுமரி மாவட்டம் கோணம் அரசு** தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவுபெற்ற கட்டுமான தொழிலாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.அழகுமீனா தலைமையில் இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**சீன ஜிங்சானில் நடைபெறும் சேலஞ்சர்** டென்னிஸ் **மகளிர்** இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் **கர்மன் கவுர் தாண்டி,** ரஷ்யாவின் **வலேரியா** இணை – பின்லாந்தின் **அனாஸ்டாசியா குளிக்கோவா,** இத்தாலியின் **ஜெசிக்கா** இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖